# பொறியியல் கல்லூரிகளின் தேர்ச்சி தரவரிசை பட்டியல்

## சாய்ராம், வேலம்மாள் கல்லூரிகள் சிறப்பிடம்

■ சென்னை

கடந்த ஆண்டு நடைபெற்ற செமஸ்டர் தேர்வுகளில் மாணவர் தேர்ச்சி அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளின் தேர்ச்சி தரவரிசைப் பட்டியலை அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. இதில் சென்னை சாய்ராம் பொறியியல் கல்லூரி, வேலம்மாள் தொழில்நுட்பக் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

பொறியியல் கல்லூரிகளில் செமஸ்டர் தேர்வில் மாணவர் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு கல்லூரிகளின் தேர்ச்சி தரவரிசைப் பட்டியலை அண்ணா பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. அதன்படி, கடந்த 2017-ம் ஆண்டு ஏப்ரல், மே செமஸ்டர் தேர்வு மற்றும் நவம்பர், டிசம்பர் செமஸ்டர் தேர்வில் மாணவர் தேர்ச்சி அடிப்படையிலான தரவரிசைப் பட்டியல் அண்ணா பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏப்ரல், மே செமஸ்டர் தேர்வில் அண்ணா பல்கலைக் கழக திருநெல்வேலி மண்டல மையம் 97.99 சதவீத தேர்ச்சியைப் பெற்று முதலிடத்தையும் மேற்கு தாம்பரம் ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி 90.46 சதவீத தேர்ச்சி பெற்று 2-ம் இடத்தையும் காரைக்குடி சிக்ரி நிறுவனம் (மத்திய அரசு கல்லூரி) 89.93 சதவீத தேர்ச்சி பெற்று 3-ம் இடத்தையும் பிடித்துள்ளன. மொத்தமுள்ள 505 கல்லூரிகளில் 7 கல்லூரிகள் 10 சதவீதத்துக்கும் குறைவான தேர்ச்சியை பெற்றிருக்கின்றன.

அதேபோல் நவம்பர், டிசம்பர் செமஸ்டர் தேர்வில் கோவை பிஎஸ்ஜி கல்லூரி 86.71 சதவீத தேர்ச்சி பெற்று முதலிடத்தையும் திருவள்ளூர் மாவட்டம் பஞ்செட்டி வேலம்மாள் தொழில்நுட்பக் கல்லூரி 84.97 சதவீத தேர்ச்சி பெற்று 2-ம் இடத்தையும் சென்னை எஸ்எஸ்என் பொறியியல் கல்லூரி 84.77 சதவீத தேர்ச்சி பெற்று 3-ம் இடத்தையும் பிடித்துள்ளன. மொத்தமுள்ள 497 கல்லூரிகளில் 3 கல்லூரிகளில் ஒருமாணவர்கூட தேர்ச்சி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏப்ரல், மே செமஸ்டர் தேர்வு தேர்ச்சி தரவரிசைப் பட்டியலில் சாய்ராம் பொறியியல் கல்லூரி 2-ம் இடம் பிடித்தது குறித்து சாய்ராம் கல்வி குழுமத்தின் தலைமை செயல் அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து கூறும்போது, "சாதனைக்கு காரணமான அனைத்து மாணவ-மாணவிகளுக்கும் பேராசிரியர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தேர்வெழுதிய 4601 பேரில் 4162 பேர் தேர்ச்சிபெற்றுள்ளனர். அனைவரும் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைந்துள்ளனர். சாய் ராம் கல்லூரியைப் பொருத்தவரையில் பல்கலைக்கழக அளவில் அதிக ரேங்குகள் பெற்ற கல்லூரிகளின் தரவரிசைப் பட்டியலில் தொடர்ந்து 3 ஆண்டுகளாக முதலிடத்தில் இருந்து வருகிறது என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்" என்றார்.

நவம்பர், டிசம்பர் செமஸ்டர் தேர்வு தேர்ச்சி தரவரிசைப் பட்டியலில் வேலம்மாள் தொழில்நுட்பக் கல்லூரி 2-ம் இடம் பிடித்திருப்பது குறித்து வேலம்மாள் கல்வி குழுமத்தின் தலைவர் எம்.வி.முத்துராமலிங்கம் கூறும்போது, "வேலம்மாள் கல்லூரி சிறந்த 10 கல்லூரிகள் பட்டியலில் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. கேம்பஸ் இண்டர்வியூ மூலமாக 70 சதவீத மாணவர்களுக்கு நல்ல சம்பளத்தில் வேலை கிடைத்துவிடுகிறது. செமஸ்டர் தேர்வு விடைத்தாள்களை திருத்துவதில் அண்ணா பல்கலைக்கழகம் அதிக கவனம் செலுத்த வேண்டும். மறுமதிப்பீடு செய்வதற்கு மாணவர்களிடம் இருந்து மிக அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும்" என்றார்.